வாராந்திர ஆலோசனைகள்- பருத்தி பயிர் சாகுபடி (30 நவம்பர்-6 டிசம்பர் 2015)(55 வது நிலையான வாரம்)

"இங்குதரப்பட்டுள்ள அறிவுரைகள் - அந்தந்த மாநில அரசு வேளாண்மை பல்கலைக்கழகங்களிலிருந்து பெறப்பட்டவை"

வானிலை ஆலோசனை

மாநிலம்/ மாவட்டம்	மழையளவு - நவம் -டிசம்பர் 2015 (மி.மீ)							ஆலோசனைகள்
தேதி	30	1	2	3	4	5	6	
தமிழ் நாடு								
பெரம்பலூர்	10	7	6	22	29	33	9	பருத்தி ஆரம்பக் காய்பிடிப்பு பருவத்தில் உள்ளது. அருகு, பார்த்தீனியம், சாரனை போன்ற களைகள் காணப்படுகிறது. முளைத்த பிறகு தெளிக்கும் களைக்கொல்லிகளை பயன்படுத்தி கட்டுப்படுத்தவும். வரப்புகளில் உள்ள களைகளை கட்டுப்படுத்த னபரிதீயோபாக் 2 மீ.லி./லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். புற்கள்: குதிரை வாலி, திமிடா, கோரை புற்கள்: வட்டக் கோரை, அகன்ற இலைக் களைகள்: சாரணை, நாய்க்கடுகு, மேலாநெல்லி போன்ற களைகளை கட்டுப்படுத்த பரிந்துரைக்கப்பட்ட மேலாண்மையை கடைப்பிடிக்கவும். மானாவாரி சாகுபடி செய்பவர்கள் தற்போதைய வடகிழக்கு பருவ மழையை பயன்படுத்தி மண்ணின் ஈரப்பதத்தை மேம்படுத்திக் கொள்ளவும். மேலும் அதற்கான நீர் வள பாதுகாப்பு முறைகளை கையாளவும். இந்த வாரத்தில் கனத்த மழை எதிர்பார்க்கப்படுவதால் வயல்களில் நீர்த்தேங்கக் கூடும். எனவே தேவைக்கு அதிகமான நீரை வெளியேற்ற முன்னேற்பாடுகளை செய்தல் வேண்டும். ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதியில் அடிக்கடி மழை பெய்வதால் குளிரான சீதோசன நிலை நீர் பாசன வசதி கொண்ட பருத்தி வயல்களில் நிலவுகிறது.மேலும் பருத்தி காய் வளர்ச்சி பருவ நிலையில் உள்ளதால் சாறு உறிஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சிகள் மற்றும் வெள்ளை ஈக்கள், இலைப்பேன் மற்றும் தண்டு அந்துப்பூச்சி ஆகியவற்றின் தாக்குதல் காணப்படுகிறது. மேலும் வேர்அழுகல் நோய்க் காணப்படுகிறது. எனவே தண்டு அந்துப்பூச்சி, வேர்அழுகல் தாக்குதலை கட்டுப்படுத்த குளோர்பைரிபாஸ் 2 மி.லி. மற்றும் பாவிஸ்டின் 2 கிராம்/ லிட்டர் தண்ணீரில் கலந்து செடியை சுற்றிலும் மண்ணில் ஊற்ற வேண்டும்.
சேலம்	5	3	3	53	20	22	7	
திருச்சி	3	3	13	34	29	52	11	
விருதுநகர்	12	11	31	36	29	52	11	

புனைவுகள்					
மழையளவு (மி.மீ)	< 5	5-20	20-50	50-80	> 80